# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 92/2013**

பெயர்: **சுப்ரமணியன்** நாள்: 20.02.2023

வா.சா.3 – பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வா.சா.3 – சுப்ரமணியன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 02.55</u>

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வரவில்லை. எனது அத்தை மகன் மாதையன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கை குமரன் மகன் முருகேசன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். வழக்கை மாதையன்மீது தாக்கல் செய்துள்ளார். முருகேசன் எனக்கு மாமன் மச்சான் உறவு முறை ஆகும். எந்த வகையில் மாமன் மச்சான் உறவுமுறை என்றால், எனது தாத்தா காலத்திலிருந்து உறவுமுறை தொடர்கிறது. அந்த தாத்தா காலத்து உறவுமுறை எவ்வாறு என்று எனக்கு தெரியாது. பழனியம்மாள் எனது அத்தை மகள் என்றால், சரிதான். பெரியசாமி எனது தாத்தா, சின்னசாமி எனது சின்னதாத்தா என்றால், சரிதான். எனது தகப்பனாருடன் பிறந்தவர் கந்தசாமி என்றால், சரிதான். எனது சின்னதாத்தா சின்னசாமிக்கு ஆறுமுகம், சின்னு என்ற இரண்டு மகன்கள் என்றால், சரிதான்.

2) சின்னுக்கு எனது அத்தை மகள் பழனியம்மாவை திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால், சரிதான். பழனியம்மாளின் கணவர் பெயர் எனக்கு சரியாக ஞாபகமில்லை. கணேசன் என்பவர் பழனியம்மாளின் மகன் என்றால், சரிதான். கணேசனின் தகப்பனார் பெயர் ஆறுமுகம் ஆகும். நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்கள் மாதையனால் கூறப்பட்டவை ஆகும். வாதிகளுக்கு சர்வே எண் 335/2, 330/10 உள்ள நிலங்களை தவிர வேறு எங்கெல்லாம் நிலம் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. மாதையனுக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. பூர்வீக நிலம் மட்டும் கொஞ்சம் உள்ளது. எனது பங்காளிகள் முத்துசாமி மற்றும் மகேந்திரனிடம் நிலம்

வாங்கினார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது. 100 வருட காலமாக தடத்தை பயன்படுத்தி வருவதற்கான ஆதாரங்கள் எதுவும் என்னிடம் இல்லை. தடம் அனுபவத்தில் உள்ளது.

3) பொதுவாக நிலத்தை சொந்த தேவைக்காக கிரையம் பெறுவார்கள் என்றால், சரிதான். பழனியம்மாள் மற்றும் கணேசன் நிலத்திற்கு வடக்குபுறமாக முருகேசன் நிலம் உள்ளது என்றால், சரிதான். பிரதிவாதி முருகேசன் வண்டித்தடத்தை பயன்படுத்தி வருகிறார் என்பது பொய் என்றால், சரிதான். எந்த சர்வே நெம்பரில் தற்போது நிலம் உள்ளது என்றால், எனக்கு எந்த நிலமும் இல்லை. முதல் விசாரணையில் தடத்தை நான் தற்போது பயன்படுத்தி வருவதாக கூறியுள்ளது பொய் என்று சொன்னால், சரிதான். முருகேசன் நிலத்திற்கு வடக்கே 5 ஏக்கர் நிலம் மாதையனுக்கு உள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 331 ல் இருந்த எனக்கு சொந்தமான நிலத்தை பாகப்பிரிவினை மூலம் எனது சித்தப்பாவுக்கு கொடுத்துவிட்டேன். சர்வே எண் 331 க்கு கிழக்கே ஒட்டினாற்போல் 5 ஏக்கர் நிலம் உள்ளது என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 331 க்கு கிழக்கே சர்வே எண் 334 உள்ளது என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 334 ஐ ஒட்டிதான் சர்வே எண் 370 உள்ளது என்றாலும், அதனை ஒட்டிதான் தார் ரோடு செல்கிறது என்றாலும், சரியல்ல.

4) சர்வே எண் 331 லும், அந்த நிலத்திற்கு தெற்கிலும், மேற்கிலும் மீன் தொட்டி உள்ளது என்று சொன்னால், சர்வே எண் 331 ல் மீன் தொட்டி இல்லை. எனது சித்தப்பாவிற்கு நான் கொடுத்த பகுதியை தவிர மற்றவைகளில் மீன் தொட்டி உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 331 ல் உள்ள மொத்த நிலம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 331 ல் எனக்கு எவ்வளவு நிலம் இருந்தது என்பதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். சர்வே எண் 331 ம் அதற்கு தெற்கே, மேற்கு உள்ள நிலங்கள் வயக்காட்டு நிலங்கள் என்றால், சரிதான். ஏரி பாசனம் நிலம் ஆகும். நான் எனது சித்தப்பாவிற்கு கொடுத்த நிலத்திற்கு கிழக்கே தற்போது தென்னந்தோப்பு உள்ளது. தென்னந்தோப்பு தார் ரோட்டை ஒட்டி உள்ளது. தென்னந்தோப்பிற்கு மேற்கே உள்ள நிலத்தில் நெல் பயிரிட்டுள்ளார்கள். நெல் பயிரிட்டுள்ள பகுதி சுமார் 6 ஏக்கர் நிலம் இருக்கலாம்.

நெல் பயிரிட்டுள்ள நிலத்திற்கு மேற்கே நான் எனது சித்தப்பாவிற்கு கொடுத்த இடம் உள்ளது என்று சொன்னால், சரிதான்.

5) 10 வருடங்களுக்கு முன்பாக முத்தாம்மாவுக்கு விற்பனை செய்த கிரைய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. 10 வருடத்திற்கு முன்பாக சர்வே எண் 370/1A4B ல் பிரதிவாதி கம்பி வேலை அமைத்தபோது நான் அங்கு இல்லை. கம்பி வேலி அமைத்தது சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஒரு சொத்தில் உரிமை கொண்டுள்ள நபர் மட்டுமே, மற்ற நபருக்கு அந்த உரிமையை கொடுக்க முடியும் என்றால், சரிதான். சர்வே எண் 370/1A4B ல் உள்ள நிலத்தை நான் வாங்கவில்லை. சர்வே எண் 370/1A4B ல் எனக்கு எந்த வசதி உரிமையும் இல்லை என்பதால், அந்த சர்வே எண்ணில் உள்ள உரிமையை வேறு யாருக்கும் நான் கொடுக்க முடியாது என்றால், சரிதான். சர்வே எண் 331 க்கு வடக்கே ஏரி உள்ளது. மாதையன் அவருக்கு சொந்தமான மீன் தொட்டியில் இன்று வரை மீன் பிடித்து வருகிறார் என்றால், சரிதான். மீன் தொட்டி 8 முதல் 10 ஏக்கரில் உள்ளது என்றால், பரப்பளவு பற்றி எனக்கு தெரியாது. மீன் தொட்டி பெரிய பரப்பளவில் உள்ள தொட்டிதான் என்றால், சரியல்ல. ஓரளவு பரப்பளவில் உள்ளது. அது மொத்தம் 3 தொட்டியாக உள்ள விபரம் எனக்கு தெரியாது. 3 தொட்டிகளுக்கு மேற்கே ஒரு வாய்க்கால் செல்கிறது என்பது தெரியுமா என்றால், ஒரு ராஜவாய்க்கால் செல்கிறது. 3 தொட்டிகளுக்கு இடையே ராஜவாய்க்கால் செல்கிறது என்று சொன்னால், நான் ஒரு தடவைக்கு மேல் அங்கு சென்றதில்லை, அதனால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த ராஜவாய்க்கால் சரபங்கா நதியில் போய் சேருகிறது.

6) நெல் வயலுக்கு தென்னந்தோப்பு வழியாக தடம் வருகிறதா என்றால், இல்லை. சுமார் 6 ஏக்கர் நெல் வயலுக்கு தடம் எங்கிருந்து வருகிறது என்றால், அதற்கு தடம் வரவில்லை. தென்னந்தோப்பை ஒட்டி மேற்கே உள்ள நெல் வயலுக்கு தடம் எங்கிருந்து வருகிறது என்றால், தடம் வரவில்லை. நான் கூறுவதுபோல் வண்டித்தடம் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றாலும், அவ்வாறு இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் எனது

சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நான் கூறுவதுபோல் முருகேசன் நிலம் வழியாக எந்த வழித்தடமும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. எனது அத்தை மகளின் மாமனார் நிலம் வாங்கிய விபரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால், அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. முருகேசன் எனக்கு மைத்துனர் முறை என்று பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல.

7) மாதையன் நிலங்களை பற்றி அனைத்து விபரங்களும் தெரிந்திருந்து, எந்த விபரமும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 03.48</u>

ஒப்பம் /கே. சுப்ரமணியம்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.